**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 135** **நாள்: 19.10.2017**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தீபாவளி பண்டிகையை ஒட்டி 80 டன் பட்டாசுக் கழிவுகள் மற்றும் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாள்தோறும் 5300 டன் குப்பைகள் அகற்றப்பட்டு வருகிறது. இதற்காக பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் என மொத்தம் 19,000 பணியாளர்கள் துப்புரவு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பண்டிகை நாளான தீபாவளி பண்டிகையை ஒட்டி 80 டன் பட்டாசுக் கழிவுகள் மற்றும் குப்பைக் கழிவுகள் அகற்றப்பட்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிவுரையின்படி, கும்மிடிபூண்டி அருகிலுள்ள அபாயகரமான கழிவுகளை (Hazardous Waste) சேகரிக்கக்கூடிய தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஆயுத பூஜை பண்டிகையின் போது கூடுதலாக 420 டன் குப்பைகள் அகற்றப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதன்கிழமை நீங்கலாக அனைத்து நாட்களிலும் மட்கும் குப்பைகளும், புதன்கிழமை அன்று மட்டும் மட்காத குப்பைகளும் சேகரிக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் தங்கள் இல்லங்களிலேயே மட்கும் மற்றும் மட்காத குப்பைகள் என தரம் பிரித்து வழங்குவதன் மூலம், துப்புரவு பணியாளர்களின் கூடுதல் சுமையை தவிர்க்க முடியும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**